Clr.No.19

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------
**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR</u>**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC. 75/2016** |
| **Sessions** | : | |
| **Deposition of witness for** | : | **Prosecution PW 3** |
| **Name** | .. | திரு. M. வீராசாமி காவல் உதவி ஆய்வாளர், சட்டம் ஒழுங்கு, M8 சாத்தாங்காடு காவல் நிலையம் |
| **Father's/Husband's Name** | .. | திரு. N.A. மணிராஜ் |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **57** |

**Date: 08/09/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்

முதல் விசாரணை

1. நான் தற்போது M8 சாத்தாங்காடு காவல் நிலைய சட்டம் ஒழுங்கு பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர்

சுந்தர்ராஜன் என்பவர் தற்போது பணிமாறுதலில் சென்று விட்டார். அவரது கையொப்பம் நன்கு தெரியும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

2. கடந்த 03.082015 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜன் நிலைய ஆஜரில் இருந்த போது மின்னலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 808/2015 சட்டப்பிரிவுகள் 457, 380 இ.த.ச பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ளார். (**புகர் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. சாட்சிகள் மின்னலா, கல்யாணி, நதியா, ரேவதி ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். சம்பவ இடத்தினை சாட்சிகள் ஹரிபாபு, சரவணன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. கடந்த 17.08.2015 அன்று மாலை 04.00 மணிக்கு விம்கோ நகர் மைதானத்தில் வைத்து எதிரியை கைது செய்து எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தினை சாட்சிகள் சுபாஷ் மற்றும் விஜய் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். (**ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள என்னை அலைத்துச் சென்றால் நகைகளை மறைத்து வைத்துள்ள இடத்தை தங்களிடம் அடையாளம் காட்டுகிறேன் என்ற அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 5 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**). ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் 17.08.2015 அன்று மாலை 05.00 மணிக்கு விம்கோ நகர் மைதானத்திலிருந்து எதிரியை அடையாளம் காட்டி ஆஜர் செய்த சுமார் 2 சவரன் எடையுள்ள தங்கச்செயினை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். (**கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5. எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கு சொத்தினை படிவம் 91ன் மூலம் நீதி மன்றத்திற்கு அனுப்பி வைத்தார். (**படிவம் 91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). **இவ்வழக்கு சொத்துக்கள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

6.விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

7. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றாலும வழக்கு ஆவணங்கள் அணைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு எதிரிக்குஎதிராக பொய்யான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.09.08 19:05:54 +0530

**நீதித்துறை நடுவர்,**

**திருவொற்றியூர்**